

காணாமல் போன
கோடீஸ்வரர்!
பிளஸ்
ஸ்பைடர்
இன்னொரு!
லயன்
காமிக்ஸ்
ரூ. 2/-



லயன் காமிக்ஸின்
மூன்றாவது
பிறந்த நாளைக்
கொண்டாடும் வகையில்
ஜீலை 1.ல்
வருகிறது
ஆண்டு மலர்!


சாகஸக் கள்ளன்
நகரில் அட்டூழியம் புரிந்து வந்த எல்லா சமூக விரோத கும்பல்களையும் ஒடுக்கி மீண்டும் சட்ட ஒழுங்கை நிலைநாட்டிய ஸ்காட்லண்டு யார்ட் இன்ஸ்பெக்டர் க்ரீனுக்கு பாராட்டு விழா-
தங்களுடை அரிய சேவையைப் பாராட்டி இவ்வாண்டின் தலை சிறந்த சமூக நலத் தொண்டர் என்ற பட்டத்தை அளிப்பதோடு, வெள்ளியிலான இந்த விருதையும் வழங்குகிறேன்!
அதையடுத்து நன்றி தெரிவித்து உரை நிகழ்த்தினார் க்ரீன்-
வெல்-டன்!
ஆக்ஷன் ஹீரோ!


கூட்டம் முடிந்து வெளியே வந்த க்ரீனை நெருங்கினாள் ஒரு நாடோடிப் பெண்-
இந்தாருங்கள்-இந்த மலர் கொத்தை கோட்டில் செருகிக் கொள்ளுங்கள்-
நன்றி!


அடுத்து-டி.வி. பேட்டி-பின்னர்-கேளிக்கை விருந்து!


ஒருமணி நேரம் கழித்து-
ஒரு நாடோடிப் பெண் ரீகல் மாளிகையினுள் நுழைகிறாள்-
அந்த ஆடம்பர மாளிகையில் இவளுக்கு என்ன வேலை?
அங்கே குடியிருப்போருக்கு மலர்க் கொத்து விற்கச் செல்கிறாள் போலும்!
லிப்டினுள் நுழைகிறாள்!
வேறு நடமாட்டமே காணோமே!
ஆனால் அந்தப் பெண் நுழைந்தது லிப்ட் அல்ல-அதன் பின் சுவர் ஒரு நுழைவாயிலின் கதவாகும்!


அந்தக் கதவின் பின்னே இருந்தது குடியிருப்பு பகுதிகளல்ல-புதிரான பட்டறைகள் - எட்டு மாடிகளிலுமே?
வெளிக்கு பெரிய செல்வச் சீமான்களின் குடியிருப்பைப் போல் தோற்றமளிக்கும் இந்த கட்டிடத்தினுள் வந்து எவரேனும் எட்டிப் பார்த்தால் திகைத்துப் போவார்கள்!


அந்த நாடோடிப் பெண் உருவமும் ஒரு போலி வடிவமே!
என் தோற்றம் மட்டும்தான் என்றில்லை-ஒவ்வொரு நடவடிக்கையுமே விசித்திரமானதுதான்! போகப் போக நீங்களே தெரிந்து கொள்வீர்கள்!
அந்த விசித்திரக் குள்ளன் வெளியே குதித்தான்-


சி.ஐ.டி இன்ஸ்பெக்டர் அவர்களே-நெடு நேரமாக நீங்கள் மட்டுமே டி.வி. திரையில் இடம் பிடித்துக் கொண்டால் எப்படி?


டி. வி. ஸ்டுடியோவில்-
தற்பெருமைக்காக நான் இதைச் சொல்லவில்லை- ஒரு பயல் என் கிட்டே வாலாட்ட முடியாது!
ஸார்-நீங்கள் கோட்டில் செருகியுள்ள மலர்க் கொத்து நீளுகிறது!
எ-எ-என்ன இது-டி.வி. ஏரியல் மாதிரி மாறி விட்டதே!
விர்ர்ர்
இந்த ஏரியல் நம் நிகழ்ச்சியில் குறுக்கிடுகிறது! புதிதாக வேறு ஒரு படத்தை அது ஒலிபரப்புகிறது!


டி. வி. திரையில்-
ஹா! ஹா! ஹா! என் பெயர் ஸ்பைடர் குள்ளன்! மாமேதை ஸ்பைடரின் தலைசிறந்த ரசிகனான நான், இன்று என் கை-வரிசையை உங்களுக்குக் காட்டப் போகிறேன்! என் முதல் இலக்கு-தற்பெருமைக்கார சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் க்ரீன்!
தன்னிடம் வாலாட்ட எவனுமே துணிய மாட்டான் என்று சற்று முன் அவர் சொன்னது எத்தகைய இமாலய தவறு என்பதை இன்றிரவு நடக்கவிருக்கும் கேளிக்கை நிகழ்ச்சியின் போது உணர்ந்து கொள்வார்!


பிரம்மாண்டமான தன் பட்டறையில் இருந்தவாறு குள்ளன் அட்டகாசமாக கொக்கரித்தான்-
உருவத்தில் நான் குள்குள்ளனாக இருக்கலாம்- ஆனால் சர்வ வல்லமை படைத்தவன்-இதை விரைவிலேயே உணர்த்துவேன்!
பின் மாலை வேளை-
கேளிக்கை நிகழ்ச்சி நடக்கவிருக்கும் ஹோட்டலைச் சுற்றி தீவிர போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்!
அந்த விஷமக் குள்ளனால் க்ரீனை நெருங்கக் கூட முடியாது!
ராட்சஸ அளவிலான கேக் ஒன்றை தூக்கியவாறு ஹோட்டலின் சமயலறையினுள் வந்தான் ஒரு வேலையாள்-


விருந்துக்கான கேக்
இதோ-


சில நிமிடங்களுக்குப் பின்-
விருந்து ஹாலுக்கு தூக்கிச் செல்லுங்கள் அந்தக் கேக்கை!



விருந்தின்போது க்ரீன் உரை நிகழ்த்தினார்-
டெலிவிஷனில் தோன்றி எனக்கு சவால் விட்ட அந்தக் குள்ளன் நிஜமாகவே ஏதாவது செய்ய எண்ணியிருக்கும் பட்சத்தில் மேலும் தாமதியாது வந்து சேரவேண்டும்-இங்கே இல்லையேல் விருந்து முடிந்து விடும்!
வழி-வழி-
அடேயப்பா-எத்தனை பிரம்மாண்டமான கேக். நன்றி தோழர்களே!
நான் இதற்கு ஆர்டர் கொடுக்க வில்லையே?


திடீரென்று அந்த கேக் திறந்து கொண்டது-
சரியான நேரத்திற்கு வந்துவிட்டேன் என்று நம்புகிறேன்!
ஆ


மின்னல் வேகத்தில் பாய்ந்தான் குள்ளன்-
உங்களையும் மிஞ்சிய கில்லாடி நான் என்று இப்போதாவது ஒத்துக் கொள்கிறீர்களா- இன்ஸ்பெக்டர்! எனவே, பரிசுக் கோப்பையை நான் வைத்துக்கொள்வது தான் முறை - ஹா - ஹா-
அடேய்-



அந்த அயோக்கிய ராஸ்கலை பிடியுங்கள்!
ஹி- ஹி- ஹி!
மீண்டும் கேக்கினுள் குள்ளன் புகுந்து கொண்ட அதே கணத்தில்-
சரிகிறது-
நகர்கிறது-
பிடித்து விடலாம்!
அடக் கடவுளே - திடீரென்று சக்கரங்கள் முளைத்துவிட்டனவே!
விர்ர்ர்!
ஊப்-ப்!



மேஜை மீது விரைந்து ஊர்ந்தது அந்த விந்தை வாகனம்-
ஹெக்-ஹெக்-ஹே!
போலீஸார் விரைந்தோடி வந்தனர்-உள்ளே-
எப்படியாவது அதை தடுத்து நிறுத்துங்கள்-என் பெருமைக்கே ஒரு சவால் இது!



மேலெழும்பிய அந்த வாகனம் ஜன்னலை தகர்த்துக் கொண்டு வெளியேறியது-
குள்ளன் தப்பி விட்டான்.
படார்!
வெள்ளிக் கோப்பையையும் கவர்ந்து செல்கிறான்!
சொன்னது போலவே இன்ஸ்பெக்டர் முகத்தில் கரியை பூசிவிட்டானே!
போலீஸார் சிதறியோட, அந்த வாகனம் வெளியே தயாராக நின்று கொண்டிருந்த ஒரு டிரக்கை நோக்கி விரைந்தது-
THE PLA
அ-ஹ!
அந்த கேக்கை பிடி-அதனுள் குள்ளன் இருக்கிறான்!


டிரக்கை வெளியே தயார் நிலையில் நிறுத்தி வைத்திருக்கிறான்-
நாசமாகப் போக! என் சாதனையை பலரும் மெச்சும் இவ்வேளையில் எனக்கு முட்டாள் பட்டம் கட்டிவிட்டானே-சே!
பயல்-தப்பிவிட்டான்- தடுத்து நிறுத்த முடிய வில்லை!
ஹீஹீஹீ-!
எப்போது-எங்கே- அடுத்து தன் கைவரிசை யைக் காட்டுவானோ-


தன் இருப்பிடத்தை வந்தடைந் தான் குள்ளன் -
ஹீ-ஹீ-என் முதல் வேட்டை இந்தக் கோப்பை-பத்திரப்படுத்தி வைக்க வேண்டும்-விரைவிலேயே நிறைய சேகரிப்பேன்-ஹாஹ்ஹா!
என் சேஷ்டைகள் இப்போதுதான் ஆரம்பித்திருக் கின்றன-விரைவிலேயே பெரிய அளவில் அட்டூ ழியம் தொடரும்-ஸ்பைடர் குள்ளன் என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே இந்த உலகமே நடுநடுங்கும் நாள் அதிக தொலைவில் இல்லை.


சில தினங்களுக்குப் பின்-தன் ஆடம்பர மாளிகையில் உல்லாசமாக பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தான் குள்ளன்-


ஹே-ஸோனர் ஸ்கேன்னர் அழைக்கிறது!
பீப்-பீப்-பீப்-
வெளியே எனக்குப் பிடித்தமான சூழல் உருவாகி வருகிறது என்பது செய்தி!


ஊஞ்சல்போல் அடுத்தடுத்து தொங்கிக் கொண்டிருந்த ஏணிகள் விரைந்து மேலேற வகை செய்தன-
மாடியில் போய் விவகாரம் என்ன என்று பார்க்க வேண்டும்!


வெளிப் பார்வைக்கு சாதாரண குடியிருப்புக் கட்டிடம் போல் தோற்றமளித்தது குள்ளனின் இருப்பிடம்-
அங்கே குடியிருப்பவர்கள் இந்த உலகத்தோடு தங்களுடைய தொடர்பை கத்தரித்துக் கொண்டு விட்டார்களா-என்ன?
ஆமாம்-யாருமே வெளியே வந்து போவதாக தெரிய வில்லை!


மேல்மாடியிலிருந்த சக்தி வாய்ந்த டெலஸ்கோப் வழியே பார்வையை செலுத்தினான்-
யாரோ ஒரு பிரபலமான புள்ளி வருகை புரிகிறார் போலும்-ஏற்பாடு ரொம்ப தடபுடலாக இருக்கிறது!


பஹ்ராம் நாட்டு ஷா வந்திருக்கிறார்-கூடவே என் பழைய நண்பர் க்ரீனும் இருக்கிறார்-நான் அவர்களை கண்காணித்துக் கொண்டி ருக்கும் விஷயம் அவர்களுக்குத் தெரிய நியாயமில்லை-பாவம்!
POLICE


சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் க்ரீன் மிகுந்த தன்னம்பிக்கையோடு காணப்பட்டார் -
கவலையே வேண்டாம்- அரசே!
என் வரவையொட்டி கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்திருக்கிறீர்கள் போலிருக்கிறது-நன்றி! என் தலைக் கவசத்திலுள்ள வைரக்கல் ஒன்றுமட்டுமே மில்லியன் பவுண்டுகள் பெறுமானமுடையது இன்ஸ்பெக்டர்!
உங்களுடைய வைரக்கல்லை கவர்ந்து செல்ல எண்ணுமளவுக்கு துணிச்சல் கொண்ட அயோக்கியசிகாமணிஎவனுமே இங்கே கிடையாது!
பஹ்ராம் நாட்டு கொடியை பறக்க விடுங்கள்!


ஆனால் கொடியை ஏற்றி, பறக்க விட்ட போது-
ஷாவின் தலைகவசத்தில் ஜொலித்துக் கொண்டிருக்கும் வைரக்கல் விரைவிலேயே ஐயாவின் கைக்கு வந்து சேரப் போகிறது! இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் மகா ஜனங்களே!
இ-இது-இதற்கு என்ன அர்த்தம் இன்ஸ்பெக்டர்?
சண்டாளன்-மீண்டும் என்னை சவாலுக்கு அழைக்கிறானே அந்தக் குள்ளன்!
ஆத்திரத்தோடு பற்களை நறநறவென்று கடித்தார் க்ரீன்-
அந்தக் குள்ளன் ரொம்பவும்தான் துள்ளுகிறான் இம்முறை அவன் வாலை ஒட்ட நறுக்கி, பாடம் புகட்டி அனுப்பி வைப்பேன்!


இதற்கிடையே, அங்கே-
நாளைய சூழ்ச்சிக்கு இப்போ
திருந்தே திட்டமிட வேண்
டும்-இலண்டனிலுள்ள அத்
தனை போலீஸாரும் நானை
ஷாவைச் சுற்றி விழிப்போடு
காவல் நிற்பது உறுதி!


மறுநாள்-
இதோ-கிளம்பி
விட்டேன்! இன்னும்
சிறிது நேரத்தில்
அந்த விலையுயர்ந்த
வைரக்கல் என்
கையில்!


தன் மாறுவேட அற்புதங்களில் ஒன்ருன 'பொம்மை வியாபாரி'யினுள் நுழைந்து கொண்டான் குள்ளன்-
இந்த சின்னஞ்சிறு பொம்மைகள் நிகழ்த்தப் போகும் அற்புதங்களைப் பார்த்து அங்கேயிருப்போர் மயக்கம் போட்டு விழுந்தாலும் ஆச்சரியப்பட மாட்டேன்!


ஒருமணி நேரம் கழித்து-ஹைட் பார்க்கில்-
ஷா அவர்களின் வருகையை குறிக்க பீரங்கிகள் 21 முறை முழங்கட்டும்-
நானறிந்த வரை, பாதுகாப்பு ஏற்-பாடு ஒருபோதும் இந்த அளவுக்கு கடுமையானதாக இருந்ததில்லே!


பாதுகாப்பு ஏற்பாட்டின் ஒவ்வொரு அம்சத்தையும் தானே நேரடியாக கண்காணித்தார்- இன்ஸ்பெக்டர் க்ரீன்!
ஒரு பயல் என்கிட்டே நெருங்க முடியாது!
அந்த குள்ளன் வெறும் சவடால் பேர்வழி! வரவே மாட்டான்!


ஆனால்-போலீஸ் காவல் நிலையத்திற்கு வெளியே சற்றுத் தொலைவில்-
அந்த ஆள் என்ன செய்கிறான்?
பொம்மை வியாபாரி! கூட்டத்தைப் பார்த்து விட்டு ஏதாவது வியா. பாரம் ஆகும் என்று வந்திருப்பான்!


அந்த பொம்மை வியாபாரி கீழே வைத்த சிறு பொம்மை சாதாரண விளையாட்டுப் பொம்மையல்ல-
என் மைக்ரோ-பீரங்கி இதோ-முழுவடிவம் பெற்று விட்டது!
ஹே-அங்கே பார்!


அந்தப் பீரங்கியினுள் நுழைந்தான் குள்ளன்-
ஸ்பைடர் குள்ளன்!
போச்சு-ஏதோ விபரீதம் நிகழப் போகிறது!


அவனை தடுத்து நிறுத்த வேண்டும்!
உன் தாத்தாவே வந்தாலும் இந்தக் குள்ளனை தடுத்து நிறுத்த முடியாதடா- முட்டாள்!
மறுகணம்-பீரங்கி இயங்கியது-
ஹீய்ய்!
பூம்ம்!
ஆ ஆ!
சொன்னவாறு குள்ளன் இங்கே வந்து விட்டான்!
பீரங்கியிலிருந்து வெளிப்பட்டு நேரே மேடை நோக்கி வருகிறான்-
பாவம்-இன்ஸ்பெக்டர் க்ரீன்!


போலீஸ் பாதுகாப்பு வளையத்தை கடந்து ஹாலின் அருகேபோய் தறையிறங்கினான் குள்ளன் -
வெறும் சவடால் பேர்வழி என்றீர்களே?
கிராதகன்!


அதிர்ச்சியை தாங்கும் சிறப்பு காலணிகளை அணிந்திருப்பதால் எப்படி பத்திரமாக தரையிறங்கமுடிகிறது
தொப்!


பவ்யமாக தலை குனிந்தான் குள்ளன் -
பஹ்ராம் நாட்டு ஷாவிற்கு குற்ற வியல் இளவரசன் ஸ்பைடர் குள்ளனின் பணிவான வந்தனங்கள் -
மேன்மைதகு ஷா அவர்களே - கலவரமடைய வேண்டாம்-பயல் உங்களை நெருங்கவே முடியாது!
அப்போது-
ஷாவை நெருங்கும் உத்தேசம் எனக்கு கிடையாதுதான்!
ஆ-ஐயோ-நீளும் உலோக கரம்!


ஷாவின் வைரக்கல்லை பிடுங்கி எடுத்துக் கொண்டதும் கை சட்-டென்று சுருங்கத்தொடங்கியது-
ஈக்க்!!
இனி என் மைக்ரோ-பைக்கை உருப்பெருக்கமடையச் செய்ய வேண்டும்!
பிடியுங்கள் அவனை-வைரக் கல்லை கவர்ந்து கொண்டு தப்பியோட முயற்சிக்கிறான்!
அனைத்தும் மின்னல் வேகத்தில்-
விர்ர் விர்ர்
அவன் தப்பிச் செல்ல வாய்ப்பேயில்லை!
உங்கள் வார்த்தைகளை நம்ப முயற்சிக்கிறேன் இன்ஸ்பெக்டர்!


குள்ளனை குறி வைத்துப் பாய்ந்தோடினர் காவல் துறையினர்-
இம்முறை மாட்டிக் கொண்டாய் எங்களிடம்!
தவறான கணிப்பு!


அசாதாரண திறன் கொண்ட பைக் மறுகணம் புயலென சீறிக்கொண்டு புறப்பட்டது-
ஹீ-ஹீ-ஹீ!
சைத்தானே!
அட!



சே- என்ன அட்டகாசம்?
பாராட்டுகிறீர்களா- அவன் ஒரு திருடன் என்பது மறந்துவிட்டதோ?
ஆனாலும் பயலிடம் சாமர்த்தியம் நிறையவே இருக்கிறது!
விரைந்து ஓடிய பைக்மீது அட்டகாசமாக நின்று கொண்டே பயணம் செய்தான் குள்ளன்-
!
!
!
!
இந்த சாகஸ செயலை பாராட்டி கைதட்டி ஆர்ப்பரிக்க யாருக்குமே மனமில்லாமல் போனது ஏனோ?


வந்த வேகத்திலேயே சென்று மறைந்து விட்டான் குள்ளன்-
மறுபடியும் என்னை மட்டம் தட்டி விட்டானே! அவனை-
அடுத்த தடவை அவனை எப்படியும் மடக்கி விடுவோம் ஸார்!


பத்திரமாக தன் இருப்பிடம் போய்ச் சேர்ந்த குள்ளன் வெற்றிச் சிரிப்பு சிரித்தான்-
செல்வம் சேர்க்கும் நோக்கத்தில் இதை நான் கவர்ந்து வரவில்லை- என் திறமையை நிரூபித்துக் காட்டவே இம்முயற்சி!



சில தினங்களுக்குப் பின்-
பல மில்லியன் பவுண்டுகள் மதிப்புள்ள
தங்கப் பாளங்களை சுமந்து கொண்டு
இலண்டனை நோக்கி வந்தது
ஒரு விமானம்-
இந்த V T.O.I. ரக விமானத்தில் ஒரு விசேஷ வசதி என்னவென்றால் இதை நேராக பாங்க் கட்டிட மாடியில் கொண்டுபோய் இறக்கி விட இயலும். தங்கத்தை அங்கிருந்து நேராக கீழேயுள்ள பாதுகாப்பு பெட்டகத்திற்கு எடுத்துச் சென்று பத்திரப்படுத்தி விடலாம்!
அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் இன்ஸ்பெக்டர் க்ரீனின் பொறுப்பில் விடப்பட்டிருந்தன-
இம்முறை அந்த குட்டிச் சாத்தான் எந்த விஷமமும் செய்ய வாய்ப்பே இல்லாதவாறு பண்ணிவிட்டீர்கள்-இன்ஸ்பெக்டர்!
ஸார்-விமானத்தின் இயக்கத்தில் கோளாறு!


துள்ளி எழுந்தோடினார் க்ரீன்-
ஆடோ-பைலட் அமைப்பு தானாகவேஇயங்கத் தொடங்கி விட்டது-விமானத்தை கட்டுப்படுத்த முடியவில்லை-
இதுவும் அந்த குள்ளனின் சேஷ்டையோ-ஊஹூம்-அப்படியிருக்க வாய்ப்பில்லை-
குள்ளன் தன் பட்டறையில் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தன-
விமானம் கிளம்பு முன்னரே அதனுள் ஊடுருவி ஆடோ பைலட் விசையில் ஒரு ரேடியோ மானிட்டரை இணைத்து விட்டேன்! தொலைவிசை இயக்கு முறையில் இங்கிருந்தவாறே விமானத்தை என்னிஷ்டப்படி செலுத்த முடிகிறது இப்போது!
புகை உமிழும் காப்ஸ்யூல் ஒன்றையும் விமானத்தின் வால் பகுதியில் இணைத்திருக்கிறேன்-இப்போது-பாருங்களேன்-வேடிக்கையை!
ஆவ்-விமானம் கர்ணமடிக்கிறது!
விமானத்தை கட்டுப்படுத்துவது குள்ளன் என்றால், அவன் இப்படிச் செய்யக் காரணம்?
அட-மீண்டும் மீண்டும் தட்டாமாலை சுற்றி கரணமடிக்கிறதே, விமானம்!


தான் செய்யப் போகும் விஷமத்தை முன்கூட்டியே- தெரிவிப்பதென்றால் குள்ளனுக்கு ஏகக் குஷி-
தங்கம் குள்ளனுக்கு சொந்தமாகப் போகிறது!
வானத்தில் அறிவிப்பை எழுதி விட்டானே-புகைச் சுருளை பயன்படுத்தி


அதையடுத்து-
மீண்டும் விமானம் என் கட்டுக்குள் வந்து விட்டது இன்ஸ்பெக்டர்!
பயல் கோட்டைவிட்டு விட்டானா? எங்கே விமானத்தோடு தங்கத்தை கடத்திச் சென்றுவிடுவானோ என்று பயந்து விட்டேன்!


தங்கப் பாளங்கள் பாங்க்கினுள் கொண்டு செல்லப்பட்டன-
கீழேயுள்ள நிலவறை தான் இலண்டனிலேயே மிகமிக பத்திரமான பாது காப்பு பெட்டக அறையாகும்!
இரவும் பகலும் தொடர்ந்து காவல் நிற்பார்கள் திறமை யான காவல்துறை அதிகாரிகள்-


கீழே பாதுகாப்பு பெட்டக அறையில்-
இதோ-தங்கப் பாளங்கள் உரிய இடத்தில் பத்திரப் படுத்தப்பட்டு விட்டன-இனி இதை கவர்ந்து செல்ல அந்த குள்ளனால்கூட முடியாது!


என் திறமையை ரொம்பக் குறைவாக மதிப்பீடு செய்யும் அந்த அறிவாளி களுக்கு விரைவிலேயே தங்களுடைய தவறு புரியும்!
தன் பட்டறையினுள் நுழைந்தான் குள்ளன்-
என் சமீபத்திய கண்டுபிடிப் பான இந்த துளையிடும் கருவி போதும்-போலீஸாரின் கண் களில் மண்ணைத் தூவி- காரியத்தை சாதிக்க!


பூமியை எப்படி குடைந்து கொண்டு போகிறது இது என்று இப்போது பாருங்கள்!


மறுசணம்-
ஸர்ர்ர்!
பார்த்தீர்களா-கத்தி எத்தனை சுலபமாக வெண்ணெயினுள் இறங்குமோ, அதைப் போல செல்கிறது!


வழியில் எதிரே தடை ஏதும் இருந்தால் அதைக் காட்டி எச்சரிக்கவும் கருவிகள் உள்ளன-
பீப்பீப்!!


தரைக்குக் கீழே, தடைகளை தவிர்த்து விரைந்து முன்னேறியது அந்த விந்தை வாகனம்-
தரைக்கு கீழே செல்லும் காஸ் குழாய்களை கவனப் பிசகாக துளையிட்டு விட்டால் தொலைந்தது!


பிறர் அறியா வண்ணம் இலக்கை நோக்கி விரைந்து கொண்டிருந் தான் குள்ளன்-


திடீரென்று-
என்ன இது- ஏதோ-குகை போல்?


ஓ-புரிகிறது! நிலத்தடி இரயில் பாதையினுள் வந்து விட்டிருக்கிறது வாகனம்!


ஓர் இரயிலும் அப்போது அங்கே வந்து சேர்ந்தது-
யாரும் கவனித்து விடலாகாது!
ஹே-என்ன அது?


அடுத்திருந்த ரயில் பாதையை ஊடுருவியபோது-
சே-இங்கேயும் ஓர் இரயில்-நேரடி மோதலை தவிர்க்க இயலாது போய்விடுமோ?
மயிரிழையில் மோதல் தவிர்க்கப் பட்டது-
நான் காண்பதென்ன- கனவா?
அம்மாடி - பிழைத்தேன்!



ஓரிரு நிமிடங் களுக்குப் பின்-தங்கம் பாதுகாப் பாக வைக்கப் பட்டிருந்த விசாலமான பெட்டக அறையினுள்-
அப்பாடா! பத்து மைல் தொலைவு பயணம் இறுதியில் நல்ல படியாக அமைந்தது-
விர்ரரரூ!
அத்தனை பேரும் வெளியே வாசல் மீது கண்ணாக காவல் காத்து நிற்கிறார்கள்- இப்படியொரு ஊடுருவலை அவர்கள் கற்பனை செய்து பார்த்திருக்கக்கூட மாட்டார்கள்!


பெட்டக அறைக்கு வெளியே-
வந்தால் நிச்சயம் அகப்பட்டுக் கொண்டு விடுவோம் என்று பயந்து அந்தக் குள்ளன் பதுங்கிக் கொண்டு விட்டான்-பார்த்தீர்களா!
கொஞ்சம் பொறுங்கள் இன்ஸ்பெக்டர்-பெட்டக அறைக் கதவு திறக்கிறது-உள்பக்கமிருந்து!


கேலியாக குனிந்து வணக்கம் தெரிவித்தான் குள்ளன்-
இனியும் காவல் காத்து நிற்க வேண்டிய சிரமம் உங்களுக்கு இல்லை- ஏனெனில்-அத்தனை தங்கத்தையும் அள்ளிக் கொண்டு விட்டேன்-சென்று வரட்டுமா- ஹாஹ் ஹா!
ஆ-! நோ-


அந்தக் குட்டிச் சாத்தானை பிடியுங்கள்!
கெக்-கெக்-கே!
தரையை துளையிட்டு, பிறர் அறியா வண்ணம் உள்ளே வந்து சேர்ந்திருக்கிறான்!


பயலை மடக்கிவிடலாம் என்ற நம்பிக்கை துளிர்த்தது க்ரீனுக்கு!
இவன் செல்லும் குகைப் பாதை வழியே நாமும் விரைந்தால் இவனுடைய இரகசிய உறைவிடம் எது என்று தெரிந்து கொண்டு விடலாம்! அரிய வாய்ப்பு- ஓடி வாருங்கள்!


வீணுக சிரமப்படாதீர்கள்-
இதையெல்லாம் முன்கூட்
டியே தீர்மானித்துக்
கொண்டு வந்திருக்கிறேன்!


மறுகணம்-குள்ளனின் வாகனம்
கிளம்பியது- வந்த பாதை வழியே!
என் வாகனம் நகர நகர
பின்னுல் குகைப் பாதை
அடைபட்டுக் கொண்டே
வரும்என்பதை அறியாத
மூடர்கள்!
ஊய்-ய்!


மீண்டும் தன் உறைவிடத்தை வந்தடைந்த குள்ளன் தங்கப் பாளங்களை பத்திரப்படுத் தலானான்-
இந்த தங்கத்தின் மீது ஆர்வ மில்லை எனக்கு. ஆனால் இதை கடத்தி வந்த சாகஸம் உல கெங்கும் என் புகழ் பரவ காரணமாக இருக்கும்!


தன் வெற்றியை பறைசாற்றத் தவறவில்லை அந்த துஷ்டன்-
அந்த விமானத்தின் பின்னால் பறக்கும் பேனரை கவனி-
தங்கம் இப்போது குள்ளன் வசம்
மறுபடியும் தன் ஆற்றலை நிரூபித் துக் காட்டிவிட்டான் அந்தக் குள்ளன்!


அந்த குள்ளனை மடக்க நானொரு திட்டம் தயாரித்திருக்கிறேன் கமிஷனர் சார்! அதை வெளியிட ஒரு இரகசிய கூட்டத்தை கூட்டியிருக்கிறேன்! அவன் ஒட்டுக்கேட்டவே முடியாத ஓரிடத்தில்!


அந்த இரகசியக் கூட்டம் ஹைட் பார்க்கின் மத்தியில் ஒரு திறந்த வெளியில் நடந்தது-
அபாரமான யோசனை இன்ஸ்பெக்டர்- யாராவது நம் அருகே வர முயன்றால் தொலைவில் வரும் போதே நாம் கண்டுகொள்ள முடியும்!


சிறு வண்டு ஒன்று அந்த உயர் மட்ட
போலீஸ் அதிகாரிகள் அருகே
பறந்து வந்தது-
கிர்ர்ர்ர்!
இம்முறை மதியூகத்தில் நான் அவனை
தோற்கடிப்பது நிச்சயம்! அவன் இந்த
கூட்டத்தின் நடவடிக்கைகளை கேட்-
டறிய வாய்ப்பேயில்லை-


அது ஒரு சாதாரண வண்டு அல்ல- அதன் பிளாஸ்டிக்
தலையிலிருந்து ஏரியல் நீண்டது- அங்கே பேசப்-
பட்ட ஒவ்வொரு வார்த்தையும் வயிற்றுப்பகுதி-
யிலிருந்த மைக்ரோ-டேப்பில் பதிவாகிறது-
கிர்ர்ர்!
ம்- இப்போது
என் திட்டத்தை
விரிவாக எடுத்-
துச் சொல்லப்
போகிறேன்-
கவனமாக கேட்டுக்கொள்ளுங்கள்!


கலந்துரையாடல் முடிவுற்றதும்-
உங்களோடு ஒரு நேரடி மோதலுக்கு அவனை அழைப்பதென்பது அருமையான யோசனைதான் இன்ஸ்பெக்டர்!
இன்றிரவே டி. வி.யில் தோன்றி அவனை சவாலுக்கு அழைக்கப் போகிறேன்!


குள்ளன் அப்போது அதிக தொலைவில் இல்லை- மாறுவேட உருவம் ஒன்றினுள்ளிருந்து வெளிப்பட்டான்-
ஹா- ஹா- இவர்கள் பேசிக்கொண்ட விபரம் அனைத்தையும் விரைவிலேயே வரிக்கு வரி தெரிந்து கொள்ள முடியும்!



தன் இருப்பிடத்தை வந்தடைந்ததும்-
ம்- இப்போது என் திட்டத்தை எடுத்துச் சொல்லப் போகிறேன்- கவனமாக-
ஒகே- அப்படியா சேதி! உடனடியாக நான் செயலில் இறங்கியாக வேண்டும்!




ஒரு மணி நேரம் கழித்து இன்ஸ்பெக்டர் க்ரீன் டி. வி. திரையில் தோன்றினார்-
ஹே!
என்னோடு ஒற்றைக்கு ஒற்றை மோதலுக்கு வருமாறு இதன் மூலம் ஸ்பைடர் குள்ளனுக்கு சவால் விடுகிறேன். இன்றிரவு மெஜஸ்டிக் ஹோட்டல் மாடியில் தனியாக வந்து காத்திருப்பேன்- சவால் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில்;


மறுகணம்- திடீரென்று குள்ளனின் உருவமும் டி. வி.யில் தெரியத் தொடங்கியது-
நாமென்றும் கோழையல்ல- சவாலை ஏற்கிறேன்!
அப்பா- அவன் எப்படி வந்தான்!
எ-என்ன- எப்- எப்படி இது'


அடேய்- குள்ள சைத்தானே உன்னை-
இப்போது சீறி பிரயோஜனமில்லை இன்ஸ்பெக்டர்- இது என் உருவத் தோற்றம் மட்டுமே- என் மேல் உள்ள கோபதாபங்களை இன்றிரவு ஹோட்டல் மாடியில் நேரடியாக நாம் சந்திக்கும் போது காட்டுங்கள்!



இருள் கவிழ்ந்தபின்வானுயரஓங்கி நின்ற ஆடம்பர ஹோட்டலின் மேல்மாடியில் தனியாக நின்றுகொண்டிருந்தார் க்ரீன்-குள்ளனின் வரவை எதிர் பார்த்து!
பயலை இன்னமும் காணோமே- ஒருவேளை பயந்து பின் வாங்கிவிட்டானோ?
அப்போது-
அப்படியொரு நப்பாசை இருக்கிறதா- ஐயோ பாவம்!
தான் மறைந்திருந்த இடத்தி-லிருந்து கீழே குதித்தான் குள்ளன்-
இதோ உங்களை சந்திக்க வந்து விட்டேன்!
அஹ்!


மோதலுக்கு நான் ரெடி- சரி- எவ்வகையான ஆயுதங்களை நாம் பயன்படுத்துவது?
நீ எதை வேண்டுமானாலும் உபயோகப்படுத்திக்கொள்- ஆனால் நான் உபயோகப் படு தப் போவது ஒரு விசில்!


விசில் சப்தம் கேட்டதும் நாலா திசையிலிருந்தும் ஓடோடி வந்து குள்ளனை சூழ்ந்து கொண்டனர் போலீஸார்-
வியய்ய்ங்!
இனி பயல் தப்பவே முடியாது!
ஓகோ- சூழ்ச்சியா?


MAJEST
சரணடைந்து விடு!
முப்பதாவது மாடியின் மேல் நிற்கிறோம்- ஓடித் தப்பிக்க வழியே இல்லை!
குள்ளனை வளைத்துப் பிடித்துவிட்ட சாதனை என் புகழ் மேலும் சிறக்க உறுதுணை புரியும்!


என் கருத்தைக் கேட்காமல் நீங்களே எல்லா வற்றையும் தீர்மானித்துவிட்டால் எப்படி?


சட்டென்று தன் முதுகில் தொங்கிய பையிலிருந்த ஒரு பட்டனை அழுத்தினன் குள்ளன்-
இது எப்படியிருக்கு?
ஹே!
வௌவாலின் இறக்கைகள்- பெரிய அளவில்!
நம் திட்டத்தை எப்படியோ தெரிந்து கொண்டு முன்னேற்பாடோடு வந்திருக்கிறான்!
ஹீ ஈஈ!


சவாலுக்கு அழைத்து பித்தலாட்டமா பண்ணுகிருய்? நேர்மையற்ற முறையில் நடந்து கொண்ட உனக்கு ஒரு பாடம் கற்பிக்கப்போகிறேன்- வா என்னேடு!
இன்ஸ்பெக்டர் க்ரீனுக்கு பயம் பிடித்துக் கொண்டது-



க்ரீனை தூக்கியவாறு பறந்தான் குள்ளன்-
உ-உதவி!
MAJ
இன்ஸ்பெக்டரை அப்படியே கீழே விட்டான் என்றால்- சே நினைக்கவே நடுக்கமெடுக்கிறது!
சில நிமிடங்களுக்குப் பின்-
டிரபால்கர் சதுக்கத்தின் மேலே வந்த போது-
குள்ளன்தான் பறந்து வருகிறான்!
இன்ஸ்பெக்டரின் கதி என்னவாகுமோ?
ஐயோ- என்னை இங்கே மேலே இறக்கி விட்டு விடாதே!
கத்தாதே- கொஞ்ச நேரம் இங்கேயே கிட- உன் சகாக்கள் வந்து மீட்டுச் செல்லும் வரை!


நெல்சனின் உருவச் சிலை மீது க்ரீனை தவிக்க விட்டு விட்டு விலகிப் பறந்து சென்றான் குள்ளன்!
ஐ-ஐயோ உ-உதவி!
ஏன் கத்துகிறாய்- இலண்டன் மாநகரிலேயே மிக உயர்ந்த மனிதன் நீதான் இப்போது! அதை எண்ணி சந்தோஷப்படுவதை விட்டுவிட்டு-


விரைவில்-
கொள்ளையடித்து நான் சேர்த்துள்ள பணத்தையெல்லாம் திரும்ப ஒப்படைத்துவிட்டேன்! இனி அந்த இன்ஸ்பெக்டர் என் வழிக்கு வரமாட்டான்! உலகிற்கும் நான் யார் என்று தெரிந்துவிட்டது!
இது ஒரு அறிமுகம் மட்டுமே! என் சாகஸங்கள் தொடரும்!
முற்றும்.


காணாமல் போன கோடீஸ்வரர்!
நள்ளிரவு-! இலண்டனின் பிரசித்தி பெற்ற டிரபால்கர் சதுக்கத்தின் மேலே- நெல்ஸன் பிரபுவின் சிலையை உரசுவதைப் போல பறந்து கொண்டிருந்தது ஒரு புதுவகை ஹெலிகாப்டர்! அதன் திறந்த கதவின் அருகே நின்று கொண்டிருந்த மனிதன் மரண பயத்தில் அலறிக் கொண்டிருந்தான்!
நோ! நோ! என்னை இங்கே இறக்கி விடாதீர்கள்!


கரிய உடையணிந்த உருவம் ஒன்று திமிறிக் கொண்டிருந்த நபரை தோளில் தாங்கிக் கொண்டு ஒரு நூலேணியில் கீழிறங்கியது-!
எ-எனக்கு த-தலை சுற்று கிறது! உயரமான இடங் களில் எ - என்னால் இருக்க முடியாது!
எனக்குத் தெரியும்! இது போன்ற விஷயங்களை தெரிந்து வைத்திருப்பது அவ்வப்போது பெரும் உதவியாக இருக்கும்!


சில விநாடிகளுக்குப் பின்னர், வானளாவிய உயரத்தில் வீற்றிருக்கும் நெல்ஸன் பிரபு-விற்குத் துணையாக அருகே கிடந்தான் அந்த அலறல் ஆசாமி! -கரிய உடையணிந்த உருவம் ஹெலிகாப்டருக்குத் திரும்பியது-!
குட் நைட் தோழா! ஸ்வீட் ட்ரீம்ஸ்!
ஆ ஆ ஆ!
அந்த கரிய உருவம் தான் C.I.D. லாரன்ஸ்!


திரும்ப வந்து டேவிட்டோடு சேர்ந்து கொண்டார் லாரன்ஸ்-
அந்தப் பயல் விடிவதற்குள் பயத்திலேயே செத்துப் போய்விடுவது உறுதி!
ஊஹூம்- சாகமாட்டான்!


மாறாக, விஷயத்தைக் கக்க தயாராகிவிடுவான். நமக்கு இது முதல்கட்ட வெற்றி-டேவிட்! அ.கொ. தீ. கழகம் அடுத்து எம்மாதிரியான சதிவேலையில் ஈடுபட திட்டமிட்டு வருகிறது என்ற உண்மையை பயலிடமிருந்து கறந்து விடலாம்!


அழிவு, கொள்ளை, தீமை-கழகம் என்ற பெயரைக் கேட்டு நடுநடுங்காத அரசு எதுவுமே இவ்வுலகில் இல்லை எனலாம். உலகின் பல்வேறு பகுதிகளிலும் கிளைகளை படரவிட்டு, மனிதகுல பாதுகாப்புக்கே ஓர் அச்சுறுத்தலாக, வளர்ந்து விட்ட விஷ விருஷம் அது. சமீப காலத்தில் 'லெனின் கிரேடு' என்ற பெயர்தாங்கிய இரஷ்ய கப்பலைத் தாக்கி அதிலிருந்த சரக்கை-தங்கப் பாளங்களை-கொள்ளையடித்துச் சென்றுவிட்டது நாசகாரக் கும்பல்-
அ.கொ.தீ.க


அடுத்து-100,000,000 யென்னை டோக்கியா பாங்க் ஒன்றின் பாதுகாப்புப் பெட்டகத்திலிருந்து கவர்ந்து சென்று பாங்க் கொள்ளையில் ஒரு புது சாதனையை உருவாக்கிய கூட்டமும் அதுவே-
CASH


அந்த சமூக விரோதக் கும்பலை வேரறுத்து, மலிந்து வரும் அராஜகத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் பொறுப்பை ஐ.நா. சபை, இணைந்து செயலாற்றும் இரட்டையர்களான லாரன்ஸ், டேவிட் வசம் ஒப்படைத்தது-
உறுப்பு நாடுகள் அனைத்தும் உங்களுக்கு அவ்வப்போது தேவைப்படும் எல்லா உதவிகளையும் உடனுக்குடன் செய்து கொடுக்கும்-லாரன்ஸ்!


லாரன்ஸும், டேவிட்டும் பயணம் செய்த ஹெலிகாப்டர், விடிகாலை வேளையில் இலண்டன் மாநகர் மீது வட்டமடித்துக் கொண்டிருந்தது-
அவன் உண்மைகளை வெளியிடுவான் என்று எதிர்பார்க்கிறீர்களா?
ஆனமட்டும் முயன்று பார்ப்போம்! சரி-கீழே இறக்கு-டேவிட்!
இதுவரை நெல்சன் அருகே தொங்கிக் கொண்டுவந்த ஆசாமியை உள்ளே கொண்டு வந்தார் லாரன்ஸ்- அவனுடைய முகத்தில் பரவி நின்ற சவக்களையையும், விழிகளில் தென்பட்ட பீதியையும் கண்டு லாரன்ஸ் தன் யுக்தி உரிய பலனை கொடுத்திருப்பதாக எண்ணி திருப்தியடைந்தார்-
நீ வாயைத் திறக்க மறுத்தால் இன்றிரவு, நாளை இரவு-இந்த அனுபவம் தொடரும்-
வே-வேண்-டாம்! எனக்குத் தெரிந்த விபரங்களை சொல்லி விடுகிறேன்!


அ. கொ. தீ. கழகத்தின் அடுத்த திட்டம் என்ன வென்று வெளியிட்டான் அந்த ரௌடி
தனக்குச் சொந்தமானதொரு கரீபியன் தீவில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக் கிடையே வாழ்ந்து வரும் பெரும் செல் வந்தரான ஜூலியஸ்வானை கடத்திச் சென்று அவருடைய திரண்ட சொத் துக்களை கழகத்திற்கு எழுதி வாங்க முயற்சி நடைபெறவிருக்கிறது-
லாரன்ஸூம், டேவிட்டும் மௌன மாக ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்-
அப்புறம்-ஸார்?
நாம் முந்திக் கொள்வோம்-ஜூலியஸ் வானை தேவைப்பட்டால் பலாத்காரத்தை பிரயோகித்து-அங்கிருந்து பாதுகாப்பான தொரு இடத்திற்கு அப்புறப்படுத்துவோம்!
டும் கிராக் தீவு தனக்குச் சொந்தமான அந்தத்தீவில்தான் பெரும் செல்வந்தரான ஜூலியஸ் வான் தங்கியிருந்தார். அவருடைய பிரத்யேக இராணுவமும் கண்காணிப்பு படகுப் பிரிவும் விழிப்போடு காவல் காத்து வந்தன-


இரண்டு தினங்களுக்குப் பின், ஒரு நள்ளிரவில் தீவிலிருந்து சுமார் ஒரு மைல் தொலைவில் நீருக்குள்ளிலிருந்து வெளியே தலை நீட்டியது ஒரு சப்மரீன். அதன் மேல்தளத்துக்கு வந்தார்கள்- லாரன்ஸும், டேவிட்டும்!
இரண்டு மணிநேரம் பொறுத்திருந்து பார்! நான் திரும்பிவராவிடில் மாற்றுத்திட்டம் B-யை அமல்படுத்து!
அந்த ரோந்துப் படகுகள் உங்களை பார்த்துவிட்டால் சுடத் தயங்கமாட்டார்கள்- எச்சரிக்கையோடு நடந்து கொள்ளுங்கள்!
நீரினுள் நழுவி நீர் மட்டத்திற்கு கீழாகவே நீந்தத் தொடங்கினார் லாரன்ஸ். சுமார் அரை மைல் தொலைவை கடந்துவிட்டபோது-
ரோந்துப் படகு ஒன்று- இம்மாதிரி ஊடுருவலை கண்டு சொல்லும் திறன் கொண்ட கருவிகள் அவர்களிடம் இருந்தால் என் பாடு ஆபத்தாகிவிடும்!


அவர் பயந்தபடிதான் ஆயிற்று-
பதினைந்து அடி ஆழத்தில் ஏதோ நடமாடுவதாக கருவி காட்டுகிறது- சுருவாகவும் இருக்கலாம்!
நீரடி வெடிகுண்டை அனுப்பி வைப்போம்!


அதையடுத்து படகிலிருந்து மேலெழும்பிய ஒரு வெடிகுண்டு கீழிறங்கியது-
வெடிகுண்டு இலக்கை நோக்கிச் செல்கிறது!


200 பவுண்டு வெடிமருந்து அடங்கிய அந்த எமன் லாரன்ஸை குறிவைத்து வந்தது-
ஐயையோ- ஓரிரு நிமிடங்களில் நான் கொத்துக் கறியாகி சிதறப் போகிறேன்!
தப்பிக்க ஒரு நூலிழை அளவு வாய்ப்பிருக்கிறது!


வெடிகுண்டின் வாய்ப்பகுதியிலிருந்த துளையை கையால் இறுக மூடினார் லாரன்ஸ்-
'நீரின் அழுத்தத்தால்,குண்டை தூண்டி வெடிக்கச் செய்யும் இயக்கத்தை தடை செய்து விட்டேன்!
TNT


ஒரு முழு நிமிடம் கழிந்தது- அந்த ரோந்துப் படகு நின்றது. அதிலிருந்த மூன்று ஆசாமிகளும் உற்று நோக்கியவாறு நின்று கொண்டிருந்தனர்-
வெடிக்கக் காணோமே?
புஸ்வாணமாக போய்விட்டதா?


அப்போது-
ஆ-ஆவ்-வ்!
ஆ-அஹ-!
தொப்


படகினுள் தாவி ஏறினர் லாரன்ஸ்-
இனி மீத தூரத்தை வசதியாக, சுலபமாக கடக்கலாம்!


கண்காணிப்பு விளக்குகள் தொலை தூரத் துக்கு ஒளியை பாய்ச்சி ஆராய்ந்த வண்ணம் இருந்தன-
நம் ரோந்துப் படகுகளில் ஒன்று-அதோ - டீசல் நிரப்ப வருகிறது போலும்!


படகிலிருந்தவர்களின் வாயில் துணியை திணித்து, நன்ருக கட்டிப் போட்டபின், நிலை-மையை ஆராய்ந்தார் லாரன்ஸ்-
அதோ-வெளிச்சம் தெரிகிற ஜன்னல், ஜூலியஸ் வானின் இருப்பிடம் இதுதான் என்று யூகிக்க இடமளிக்கிறது!


அந்தச் செல்வச் சீமான் நடு இரவிலும் மும்முரமாக இயங்கிக் கொண்டிருந்தார்-
அந்த கப்பலிலுள்ள அரிசி மூட்டைகளை அப்படியே கடலினுள் கொட்டிவிடு-கையிருப்பிலுள்ள அரிசியை இருமடங்கு விலையில் விற்க அது வகை செய்யும்-நம் லாபம் கூடுதலாக இருக்கும்!



பேசி முடித்துவிட்டு போனை கீழே வைத்த வான் சப்தம் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினார்-
யாரங்கே?
ஒரு சிறு காப்ஸ்யூலை தூக்கி எறிந்தார் லாரன்ஸ்-
குட் ஈவ்னிங்-மிஸ்டர் வான்! மன்னிக்க வேண்டும்-விரிவாக அறிமுகம் செய்து கொள்ள அவகாசம் இல்லை!
சட்டென்று வெடித்த காப்ஸ்யூல் வெண்ணிற புகையை கக்கியது-
ஆஆ-வ்!
புஸ்ஸ்!


வந்த வேலையை முடித்துக் கொண்டு,
வந்த வழியே வெளியேறினார் லாரன்ஸ்-
அனைத்தும் ஒரு சில நிமிடங்களில்!


சிறிய டார்ச் விளக்கை 'பளிச் பளிச்' சென
மும்முறை எரியவிட்டார் லாரன்ஸ்-அது
டேவிட் இருந்த நீர் மூழ்கி கப்பலை படகுத்
துறைக்கு வரவழைத்தது!
ஸார்-?
முழு வெற்றி!


ஜூலியஸ் வானை டேவிட் வசம்
ஒப்படைத்தார் லாரன்ஸ்-
நான் இங்கே வரும் வழியில் ரோந்துப் படகு எதுவுமே என் அருகில் வரவில்லை!
இப்பகுதியை காத்து வந்த ரோந்துப் படகை நான் கவர்ந்து வந்து விட்டேன்! நீ பத்திரமாக பயணம் செய்ய வேண்டியது அவசியம், டேவிட்! புறப்படு!
அலைவரிசை Z-ல் என்னோடு தொடர்பு கொள். வானைத்தேடி வேண்டாத விருந்தாளிகள் விரைவிலேயே வந்து சேரக் கூடும்! ஆனால் அவர்களை வரவேற்கப் போவதோ-நான்!
பாவம்-
அவர்கள்!



மீண்டும் வானின் அறைக்குள் வந்தார் லாரன்ஸ்-
ரப்பரால் ஆன முகமூடியை மாட்டிக் கொண்டு விட்ட லாரன்ஸ் ஜூலியஸ் வானாகவே காட்சியளித்தார்-
வரப் போகிற அ. கொ. தீ. கழக ஆசாமிகளை ஏமாற்ற இது போதும்!



மறுசணம்-கதவை யாரோ தடதட வென்று தட்டினார்கள்!
பாஸ்-பாஸ்-கதவைத் திறங்கள்-சீக்கிரம்! விபரீதம் நிகழ்ந்து விட்டது!
சோதனையான கட்டம்!
இந்த மாறுவேடம் வானின் ஆட்களையும் ஏமாற்றி விடுமா- அல்லது?
வா, வா- உள்ளே!


வந்தவன் எதிரேயிருக்கும் நபர் தன் எஜமா-
னர் என்றே எண்ணி பேசலானான் -
நம் ரோந்துப் படகை தாக்கி அபகரித்துக் கொண்டு ஒரு அந்நியன் தீவினுள் ஊடுருவியிருக்கிறான்!
வானைப் போலவே அலட்சியமாகப் பதில் சொன்னான் லாரன்ஸ்-
இந்தச் சிறு விஷயங்களையெல்லாம் என்னிடம் சொல்லி தொல்லை கொடுக்காதே. அவனைத் தேடிப் பிடித்து கொன்றுவிடவேண்டியது தானே!
சரி பாஸ்- இதோ!


அவன் அகன்றதும் முகமூடியை
கழற்றி எறிந்தார் லாரன்ஸ்-
இனி அ.கொ.தீ.கவினரின் வரவை
எதிர்பார்த்து காத்திருக்க வேண்டியது
தான். அந்தக் கும்பல் என்ன
யுக்தியை கையாண்டு இங்கே வந்து
சேரும் என்று கற்பனை செய்யக்
கூட முடியவில்லையே!
விடிகாலை வேளையில்- சுழற்காற்றில் சிக்கி உருக்
குலைந்த படகு ஒன்று தள்ளாடியவாறு
டும் கிராக் தீவை நெருங்கியது-


கரையை ஒட்டியிருந்த உறுதியான கரும்பாறைகளில் மோதி மேலும் சேதமடைந்தது அந்தப் படகு-
படகில் இருந்தவர்களை இழுத்து கரை சேர்த்த வானின் படைவீரர்கள் அவர் களிடம் எந்த அனுதாபமும் காட்டத் தயாராகயில்லை-


இது தனியாருக்குச் சொந்தமான தீவு- உங்களை விசாரிக்க வேண்-டும்- வாருங்கள் என்னோடு!
ஹே- பீடை பிடித்த தீவில் வந்து இறங்க வேண்டும் என்று நாங்களா ஆசைப்பட்டோம்?


குன்றின் மீது இருந்த வானின் மாளிகை நோக்கி அந்த நபர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்-
விஷயத்தை பாஸுக்கு உடனே தெரியப்படுத்த வேண்டும்!


ஆனல் மாளிகையினுள் நுழைந்த உடனே அந்த அன்னியர்கள் துரிதகதியில் செயல் பட்டனர்!
ம்ம்- ஆரம்பமாகட்டும்!


கண்ணீர் புகை குண்டு ஒன்று வெடித்தது!
ஈஈ-க்க்!


குன்றின் விளிம்பில் நிலைப்படுத்தப்பட்டிருந்த இயந்திர துப்பாக்கி அமைப்பை சிதைத்தனர் அந்த ஊடுருவல் பேர்வழிகளில் மூவர்!
அஹ்!


மற்றுமிருவர் வானின் அறையை நோக்கிப் பாய்ந்தோடி பூட்டைக் குறிவைத்து துப்பாக்கியை முழக்கினர்.


அவர்கள் வேறுயாருமில்லை-அ.கொ.தீ.கழக உறுப்பினர்கள் தான்!
இப்போது நீங்கள் எங்களோடு வருகிறீர்கள் மிஸ்டர் ஜூலியஸ் வான்!


திட்டமிட்டபடி கச்சிதமாக நடந்தேறிவிட்டது கடத்தல் வேலை. கண்காணிப்பு இலக்குகளை சிதைத்த சில வினாடி களுக்குப் பின் ஒரு ஹெலிகாப்டர் அந்தத் தீவில் தரையிறங்கியது-


ஜூலியஸ்வானாக மாறுவேடம் புனைந்திருந்த லாரன்ஸ் ஹெலிகாப்டரில் ஏற்றப்பட்டார்-


படகு கரையோரம் ஒதுங்கிய-திலிருந்து ஹெலிகாப்டர் மேலெழும்பி தன் திரும்பு பயணத்தை தொடங்கியதுவரை இடைப்பட்ட கால அவகாசம் பத்துநிமிடங்களே! அ.கொ.தீ.கழகத்தினரின் செயல் வேகத்திற்கு இது ஒரு சான்றாகும்!
சந்திப்பு இலக்கை நோக்கி ஹெலிகாப்டரை உச்ச வேகத்தில் செலுத்து!
மாறுவேடத்திலிருந்த லாரன்ஸ் அதிகமாக முரண்டு பண்ண-வில்லை! தன் கைக்கடிகாரத்தி-லிருந்த திறன் மிக்க சிற்றலை டிரான்ஸ்மிட்டரினுள் கிசுகிசுத்துக் கொண்டிருந்தார்!
டேவிட்- டேவிட்!
செய்தி சப்மரீனில் இருந்த டேவிட்டை எட்டியது-
ஹெலிகாப்டரில் சென்று கொண்டு இருக்கிறோம். எங்கள் இலக்கை அவ்வப்போது உனக்கு தெரிவிக்-கிறேன்- திட்டம் Cயை அமல்படுத்து!




பாறைகளுக்கிடையே இருந்த குகை போன்ற அமைப்பினுள் ஹெலிகாப்டர் நுழைந்தது-
நீ இருக்குமிடத்திலிருந்து தெற்கே சுமார் 50 மைல் தொலைவிலுள்ள ஒரு தீவுக்கு வந்திருக்கிறோம். சமிக்ஞை அனுப்பும் கருவியை இயக்குகிறேன்- உச்ச வேகத்தில் இங்கே வந்து சேர்!
மெள்ளக் குனிந்து தன் பூட்ஸின் கீழேயிருந்த நுண்ணிய சுவிட்சை அழுத்தினார் லாரன்ஸ்-
அதுவும் ஒரு சிறு ரேடியோ டிரான்ஸ்மிட்டராகும்-
அது அனுப்பிய சமிக்ஞை டேவிட் எதிரே இருந்த திரையில் புள்ளியாக உருப்பெற்றது-
உச்ச வேகத்தில் சென்றால் அங்கே போய்ச் சேர மூன்று மணி நேரம் பிடிக்கலாம்!



இதற்கிடையே, தீவின் மத்தியிலிருந்த தளத்தில் போய் இறங்கியது ஹெலிகாப்டர்-
இப்படி வாருங்கள்- மிஸ்டர் ஜூலியஸ் வான்!


ஆடம்பரமாக அலங்கரிக்கப்பட்டிருந்த விசாலமான அறை ஒன்றில் அழைத்துச் செல்லப்பட்டார் லாரன்ஸ். மேஜையின் பின்ஞல் நின்று கொண்டிருந்தவனின் பார்வையில் திமிர் இருந்தது. தான் ஏற்றுக் கொண் டிருந்த வேடத்திற்கு ஏற்ப கோபாவேசமாக சீறிஞர் லாரன்ஸ்-
இந்த அடாவடித்தனத் திற்கெல்லாம் என்ன அர்த்தம்?
அமைதி-அமைதி- அப்படி அமருங்கள்!
உங்களுடைய சொத்துக்களை எல்லாம் வைரங்களாக மாற்றி, வருகின்ற எங்கள் நபர் வசம் உடனே ஒப்படைக்க வேண் டும் என்று, உங்களுடைய ஜுரிச் வங்கி யினருக்கு நீங்கள் கோரிக்கை விடுப்ப தாக தயாரிக்கப்பட்டிருக்கும் இந்தக் கடிதத்தில் இப்போது கையெழுத்திடுகி றீர்கள்-யோசித்து நிதானமாக கையெ- ழுத்திடலாம்-ஐந்து நிமிட அவகாசம் தருகிறேன்!


வானின் அறையில் தங்கியிருந்த வேளையில் வானைப்போல் கையெழுத்திட பழகியிருந்தார் லாரன்ஸ்-
தர்க்கம் பண்ணி நேரத்தை வீணடிக்காமல் கையெழுத்திட தீர்மானித்த உங்கள் விவேகத்தை பாராட்டுகிறேன்! உங்களுடைய உயிரோடு ஒப்பிடுகையில் நூறுமில்லியன் பவுண்டுகள் ஒரு தொகையே அல்ல தான்!


கேட்டபடி என் சொத்துக்களை எழுதிக் கொடுத்துவிட்டேன்-என்னை பத்திரமாக வெளியே அனுப்ப வேண்டியதுதானே!
வைரங்கள் எங்கள் கைக்கு வந்து சேர்ந்தபின் இந்தச் சிறிய விஷயத்தைப் பற்றி தீர்மானிப்போம்-இப்போதைக்கு இவரை அறையினுள் பூட்டி வையுங்கள்!


லாரன்ஸை ஓர் அறையினுள் தள்ளி னார்கள். இரண்டு மணி நேரம் பொறு மையாக காத்திருந்துவிட்டு தன் வேடத்தைக் களைந்தார்.
இனித்தான் இருக்கிறது சுவாரஸ்யமான கட்டம்!
இரப்பர் முகமூடியை தாழ்ப்பாளில் பிணைத்தார்-
பிளாஸ்டிக் வெடியோடு, ப்யூஸ், தூண்டு விசை அனைத்தும் உள் ளடங்கிய இந்த முகமூடியை வடிவமைத்த டேவிட்டுக்கு நன்றி!


பத்து விநாடிகளுக்குப் பின் - கதவு படீரென்று திறந்து கொண்டது- கணமும் தாமதியாது வெளியே பாய்ந்தார் லாரன்ஸ்-
படால்!


ஏதோ விபரீதம் என்று அங்கே ஓடிவர யத்தனித்த காவலாளி தன் துப்பாக்கியை இயக்குமுன் லாரன்ஸ் முந்திக்கொண்டார்!
ஆ-ஆவ்வ்!
சக்!


தாழ்வாரத்தின் வழியே ஓடினார் லாரன்ஸ்-
ஓ- அந்தப் படகு எனக்காக காத்துக் கொண்டிருப்பது போல-


பாய்ந்து ஏறிக்கொண்டு கட்டை அவர் அவிழ்த்து எறிந்தபோது எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டது-
யாரோ அன்னியன் ஊடுருவி இருக்கிறான்- எச்சரிக்கை!


உச்ச வேகத்தில் படகை கிளப்பி புயலென குகை வாயிலை நோக்கிப் பாய்ந்தார் லாரன்ஸ்-


பாறை விளிம்பிலிருந்த துப்பாக்கி அமைப்பு
கள் பயங்கரமாக முழங்கின-


சீறி வந்த தோட்டா மழையினூடே லாவகமாக படகை விரைந்து செலுத்தினார் லாரன்ஸ்-
இன்னும் ஐம்பது கஜங்கள்! நாற்பது- தப்பித்து விடுவேன்!
டுமீல்!
டுமீல்!


மறுவினாடி- குகை வாயிலை கடந்து விசாலமான கடல் பரப்புக்கு வந்துசேர்ந்தார் லாரன்ஸ்-
இனி அந்த பெருச்சாளிகளை வளையினுள்ளேயே மடக்கிப்போட ஏதாவது செய்யவேண்டும்!


படகிலிருந்த வெடிகுண்டு வீசும் விசை-யை இழுத்தார் லாரன்ஸ்- சக்தி வாய்ந்த இரண்டு குண்டுகள் இலக்கை நோக்கி பறந்தன-


பலத்த வெடியோசையைத்தொடர்ந்து பெரும் பாறைகள் குகையின் வாயிலை அடைத்தன-
கச்சிதமாக முடிந்தது காரியம்!


அதையடுத்து, படகிலிருந்து வெளியேற தீர்மானித்தார் லாரன்ஸ்-
எந்த விநாடியும் டேவிட் இங்கே வந்து சேரக்கூடும்!


கால்மணி நேரம் அப்பகுதியில் மெதுவாக நீந்திக் கொண் டிருந்தார் லாரன்ஸ்-அதையடுத்து ஒரு சப்மரீன் அவர் அருகே தலைதூக்கியது-அதன் உச்சியில் டேவிட்டின் மொட்டைத் தலை பளபளத்தது!
ஏறி வாருங்கள்-ஸார்! காப்பி-ரெடி!


உள்ளே பத்திரமாக இருந்த ஜூலியஸ் வான் உண்மையறியாமல், இன்னமும் சீறிக் கொண்டிருந்தார்-
என்னை கடத்திச் செல்லும் விஷமத்திற்கு, உங்களை-
நூறு மில்லியன் பவுண்டுகள் பணயத் ெ கையாக கொடுக்க வேண் ர்ப்பந்தத்திலிருந்து உங்களை நாங்கள் காப்பாற்றி-யிருக்கும் உண்மையை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டிய தருணம் வந்து விட்டது மிஸ்டர் ஜூலியஸ் வான்!




லயன் காமிக்ஸ் சார்பாக வெளியிடுபவரும், ஆசிரியரும்: **S.** விஜயன். முகவரி: லயன் காமிக்ஸ், த. பெ. 55, சிவகாசி-626123. போன்: 21159. வெளியீடு எண்: 37. அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி-626123.


இந்த சம்பவத்தின் பின் விளைவாக நடந்த நல்லதொரு செய்தியை சில தினங்களுக்குப் பின் செய்தித்தாளில் படித்தறிந்தனர் அந்த இரு துப்பறியும் நிபுணர்களும்!
உலக அனாதைகள் பராமரிப்பு நிதிக்கு ஜூலியஸ் வான் மில்லியன் பவுண்டுகள் நன்கொடை வழங்கியிருக்கிறார்!
இதைப் பற்றி பெருமைப் பட்டுக் கொள்ள நமக்கு நிச்சயமாக உரிமையுண்டு - இல்லையா-ஸார்?
முற்றும்


வருகிறது!
டெக்ஸ் வில்லர் தோன்றும்
"இரத்த வெறியர்கள்!"
லயன் காமிக்ஸ்


விச்சு & கிச்சு
ARSENAL F.C. SORRY FULL UP.
WOLVES F.C. NO VACANCIES
NO!
ஏதாவது ஒரு கால்பந்தாட்டக் குழுவில் சேருவதற்கு நீ துடித்துக் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன் கிச்சு! நிஜமாகவா?
அதற்கென்னவாம் இப்பொழுது?
இல்லை- எனக்குத் தெரிந்த ஒரு க்ளப்பில் புதுமுகங்கள் தேவைப் படுகின்றன அவர்களை நீ ஏன் சந்திக்கக் கூடாது?
அணியின் பெயர் டக்கர் டஜன்! இதோ கேப்-டனின் முகவரி!
ரொம்ப ரொம்ப தேங்க்ஸ் விச்சு கண்ணு!
ஆஹ்ஹா- இதோ இந்த வீடே தான்! அடேய் கிச்சு பயலே சமர்த்தாய் பேசி எப்படியாவது டீமில் ஒரு இடம் வாங்கி விடு!


குட் ஈவினிங் மேடம்! 'டக்கர் டஜன்' கால்பந்தாட்டக் குழுத் தலைவரின் வீடு இதுதானே? நான் கொஞ்சம் அவரைப் பார்க்கலாமா?
உடனடியாகப் பார்க்க முடியாதே!
அவர் இன்னமும் வீட்டுப் பாடத்தை எழுதி முடிக்கவில்லை!
விச்சு

முற்றும்.


வருகிறது!
அதிரடிப் படை!
லயன் காமிக்ஸ்

# வாசகர் கடிதம்!

● **நா. இன்பசிலம், தவுட்டுப்பாளையம்.**

''லயனில் வந்த கதைகள் எட்டு.
அத்தனையும் எங்களுக்கு தேன்சொட்டு.
ஸ்பைடரின் கதையோ எங்களுக்கு லட்டு.
கோடைமலரின் அட்டையோ தங்கத் தட்டு'

● **K. குமரன், இராஜபாளையம்.**

டெக்ஸ் வில்லரோ சுறுசுறுப்பு,
ஆர்ச்சியோ கிளுகிளுப்பு,
அட்டையோ பளபளப்பு,
மொத்தத்தில் கோடை மலர் நல்ல விருந்து
அதை அளித்த லயனுக்கோ நன்றி!

● **N. ரமேஷ் முரளி, N. அகிலா கவுந்தப்பாடி.**

லயன் காமிக்ஸ் ''கோடை மலர்'' படித்தோம். அனைத்துக் கதைகளும் சூப்பர், 'கார்வினின் யாத்திரைகள்' வித்தியாசமான அதே சமயம் அருமையான கதை.சார்! ஒரு சின்ன உதவி! ஆர்ச்சி கதையில் வரும் அந்த தட்பவெப்ப நிலையை மாற்றும் கருவியை அனுப்பி வையுங்கள். எங்கள் ஊரில் கதிரவனின் கோபத்தைத் தாங்க முடியவில்லை!

● **V. மாரிமுத்து ராஜன், திண்டுக்கல்.**

ஆகா! கோடை மலரில்வெளிவந்த ஒவ்வொரு கதையும் அருமை! ஸ்பைடர் சாகஸம் சூப்பர்! பழிக்குப் பழி, கதை சினிமாவைப்போல விறுவிறுப்பாக இருந்தது.

● **I. கிருபாகரன், எரும்பி-2.**

விச்சு கிச்சுவின் கோமாளித்தனம் ஸ்பைடரின் எதற்கும் பணியாத் தன்மை கார்வினின் யாத்திரை வில்லரின் சட்டப்பாதுகாப்பு லாரன்ஸின் அ.கொ.தீ. கழக ஒழிப்பு இரட்டையரின் ஸ்டண்ட் வேலைகள் ஆர்ச்சியின் கோணங்கித் தனம் ஜோக்கரின் ஜோக்குகள் ஆகியவற்றை கொண்ட கோடை மலரை தந்த லயன் ஆசிரியருக்கு எங்களது நன்றி!

● **'வில்லர்'ப்ரியன், பரமக்குடி 7.**

எல்லாக் கதைகளும், 'டாப்'பாக இருந்தன. முக்கியமாக டெக்ஸ் வில்லரின் பழிக்குப்பழி அருமை. அவரது சாகஸங்களைப் படிக்கும்போது வில்லர், கார்ஸன் ஆகியோருடன் சேர்ந்து நானும் எதிரிகளை வீழ்த்துவதுபோல் நினைத்தேன்.

● **J. கலீல்கான், கூடலூர்.**

'திகில் கோடை மலரை' விரைவில் எதிர் பார்க்கிறேன். திகில் கோடை மலர் 10 ரூபாய் விலை ஏற்றினாலும், நாங்கள் வாங்க தயார். காமிக்ஸில் சாதனை புரிந்த விஜயன் அவருக்கு மட்டுமல்ல அனைத்து நண்பர் ஊழியர்களுக்கும் எனது பாராட்டு!

● **A. முகம்மது ஹனிபா, திருவாரூர்.**

டேஞ்சர் டயபாலிக் கதை வருகிறது என்று போட்டு 1½ ஆண்டு ஆகி விட்டது. ஏன் சார் இன்னும் போடவில்லை?

## விரைவில் வருகிறார்!

# டேஞ்சர் டயபாலிக்!




வருகிறது
திகில்!
கோடை மலர்!
பாக்கெட் சைஸ்!
இலவச தாய விளையாட்டு இதழுடன்!
வளவளப்பான கண்ணாடி அட்டை!
அற்புதக் கதைக் குவியல்!
ரூ. 5/-


ஸ்பைடர்-
அடுத்த வெளியீடு!
கல்நெஞ்சன்
லயன் காமிக்ஸ்
ரூ. 2-50


ஒரு சூப்பர் நியூஸ்!
அடுத்த மாதம் முதல் ஜூனியர் & மினி லயன் இணைந்து ஒரே காமிக்ஸாக வெளி-வருகிறது!
புதிய பகுதிகள்!
துப்பறியும் கதைகள்!
விலை ரூ. 2-50